# நாகை அரசு விழாவில் முதல்வர் உரை!...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

2010-ஆம் ஆண்டு முதல் இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இடையே பல கட்டங்களாக நடந்த பேச்சுவார்த்தைகள், இப்போது நடப்பதில்லை. 2016-ஆம் ஆண்டு இந்திய - இலங்கை மீனவர் இடையே, அமைச்சர்கள் மட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீறப்படுகிறது!

இலங்கைக் கடற்படையின் அடக்குமுறை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இலங்கையின் வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டத்தால் கொடுமைகள் அரங்கேறுகிறது! இதுபற்றி ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் என்ன சொல்கிறார்? “இந்திய அரசின் தரப்பில், வெளியுறவுத்துறை, மீன்வளத்துறை அதிகாரிகள் நான்கு பேரும், இலங்கை அரசின் தரப்பில், நான்கு பேரும் இணைந்து, ஒரு குழு அமைத்து, தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கண்டு வருகிறோம்” என்று சொன்னாரே தவிர, ஆனால், இதுவரை எதுவும் நடந்ததாக தெரியவில்லை!

அதற்கு முதலில், தமிழ்நாட்டு மீனவர்களை இந்திய மீனவர்களாக ஒன்றிய அரசு பார்க்கவேண்டும். பாரதப் பிரதமர் அவர்களே, இதில் நீங்கள் தான் நேரடியாக தலையிட்டு தீர்க்கவேண்டும். இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும் - கைது செய்யப்படுவதும் காலம் காலமாக தொடர்ந்து கொண்டே இருக்க முடியாது! இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்!

**உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்!**

நம்முடைய மீனவர்களின் உரிமையை நிலைநாட்டுகின்ற வகையில், உறுதியான நடவடிக்கையை நீங்கள் எடுக்கவேண்டும். மிகக் கொடூரமான விதிமுறைகள், தண்டனைகள் அடங்கியுள்ள 2018-ஆம் ஆண்டு சட்டத்தை இலங்கை அரசு முதலில் நீக்கவேண்டும்!

சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களுடைய மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட நீங்கள் பேசவேண்டும்! மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகள் வழங்க வேண்டும்!

மீனவர்களிடம் அதிக அளவில் அபராதம் வசூலிக்கக்கூடிய அந்த கொடுமையை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்!

கச்சத்தீவு அருகே தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பதை இலங்கை அனுமதிக்கும் வகையில், புதியதொரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் உங்களை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி ஒவ்வொரு விவகாரத்திலும், நாம் நம்முடைய உரிமையை நிலைநாட்ட போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். அனைத்துத் திட்டங்களிலும் தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நிதி முறையாக வருவதில்லை.

❖ இயற்கை பேரிடர் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்ய கூட, நிவாரண நிதியை முழுமையாக தருவது கிடையாது.

❖ ஏன், இப்போது பள்ளி மாணவ - மாணவியர் படிப்புக்காக தர வேண்டிய நிதியைக் கூட தருவதில்லை!

❖ இந்த நிதியை தரவேண்டும் என்றால், என்ன சொல்கிறார்கள் - மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நமக்கு நிபந்தனை போடுகிறார்கள்!

**இருமொழிக் கொள்கையால்தான் தமிழ்நாடு முன்னேற்றம்!**

இந்த ஒன்றிய அரசு ஏன் செய்தது தெரியுமா? தமிழ்நாடு இந்தளவுக்கு முன்னேறியிருப்பதற்கு காரணம் இருமொழிக் கொள்கை தான் என்பது அவர்களுக்குத் தெரியும். ஒன்றிய அரசின் அனைத்து புள்ளிவிவரங்களிலும், முன்னணியில் இருக்கிறோமே... அது தெரியாதா அவர்களுக்கு? நன்றாக தெரியும்...! தெரிந்தும் ஏன் செய்கிறார்கள்... தமிழ்நாட்டின் வளர்ச்சி - தமிழின் தனித்துவம் சிலருடைய கண்களை உறுத்துகிறது... அதனால் இப்படி செய்கிறார்கள்.

உலகம் முழுவதும் நம்முடைய தமிழர்கள் பெரிய பெரிய கம்பெனிகளில், பெரிய பெரிய வேலைகளில் இருக்கிறார்கள். அதற்கு காரணம், ஆங்கிலம் கற்றுக்கொண்டது! அந்த இடத்தில், இந்தியை கற்றுக் கொண்டிருந்தால், நம்மால் இந்த உயரத்தை அடைந்திருக்க முடியுமா? முடியவே முடியாது.

நம்முடைய தாய்மொழி தமிழ்! உலகத்துடன் பேச ஆங்கிலம்! வாழ்க்கையில் முன்னேற அறிவியல் - தொழில்நுட்பம் - கணிதம் - சமூக அறிவியல் போன்ற படிப்புகள்! இது தான் நம்முடைய வெற்றியின் அடிப்படை!

நான் இன்னும் வெளிப்படையாகவே சொல்கிறேன்... இந்தி ஆதிக்கம் எதற்கு என்றால், சிலருடைய சமூக ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதுதான்! இதை உணர்ந்த காரணத்தால்தான் இந்தித் திணிப்புக்கு எதிரான நம்முடைய உரிமைக்குரலுக்கு இப்போது, வட மாநிலங்களில் இருந்தும் - ஆதரவுக் குரல்கள் வருகிறது! இந்த சதியை பல ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ்நாடு உணர்ந்துவிட்டது. அந்தச் சதியின் தொடர்ச்சியாகதான், இப்போது நடக்கின்ற மிரட்டல்கள் என்று இளைய தலைமுறையினரும் - ஏன், தமிழ்நாட்டுக் குழந்தைகள்கூட உணர்ந்திருக்கிறார்கள்.

செய்திகளிலும், சமூக வலைத்தளங்களிலும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்... கடலூரைச் சேர்ந்த சிறுமி, நன்முகை! “ஒன்றிய அரசு நிதி தரவில்லை என்றால் என்ன? நான் தருகிறேன்” என்று தன்னுடைய சேமிப்புப் பணமான பத்தாயிரம் ரூபாயை காசோலையாக எனக்கு அனுப்பி வைத்தார்! தன்னுடைய தாத்தாவும், பாட்டியும் தமிழாசிரியர்கள் என்று குறிப்பிட்டு, ‘தமிழ் வாழ்க’ என்று தமிழ் உணர்வை - வீடியோவாக அந்தக் குழந்தை வெளிட்டதைப் பார்த்து நான் கண் கலங்கிவிட்டேன்... உடைந்து போய்விட்டேன்.

அதேபோல, இன்னும் பல பிஞ்சு உள்ளங்கள் நிதி வழங்கியபோது, அவர்களுடைய உணர்வும் - உறுதியும் என்னை நெகிழ வைத்தது... ஆனால், என்னால் மகிழ்ச்சியடைய முடியவில்லை! இந்தப் பிஞ்சுக் குழந்தைகளுக்கு இருக்கின்ற உணர்வு கூட ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு இல்லையே என்று வேதனை தான் நான் அடைந்தேன்! பிஞ்சுக் குழந்தைகளுக்குகூட ஒன்றிய அரசின் சதி புரிந்திருக்கிறது. இதுதான், தமிழ்நாடு! இது தான், தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வு!

**தமிழ்நாட்டிற்காக உழைக்கவே என் வாழ்வு!**

இந்த தமிழ்நாட்டிற்காக உழைக்கத்தான், உரிமைகள் பெற்றுத் தரத்தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வாழ்வு இருக்கிறது. போராடி பெற்ற நம்முடைய உரிமைகளை கூட எப்படியெல்லாம் பறிக்கலாம் என்று நினைப்பவர்களாக இன்றைக்கு ஒன்றிய ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள். நம்முடைய பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு, நம்முடைய குரலை நசுக்குகின்ற ஆபத்தாக, தொகுதி மறுசீரமைப்பு வர போகின்றது! அதனால்தான் முன்னெச்சரிக்கை உணர்வுடன், அதற்கு எதிராக குரல் எழுப்ப தொடங்கியிருக்கிறோம்.

நாளை மறுநாள், இது சம்பந்தமாக தமிழ்நாட்டின் உணர்வை, ஒற்றுமையாக ஒருமித்த குரலில் எழுப்பவேண்டும் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன்... அனைத்து பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கும் முறையாக அழைப்பு அனுப்பியிருக்கிறோம். பலரும் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு சிலர் கலந்து கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மேடையில் நின்று, மக்கள் முன்பு நின்று, அவர்களுக்கு நான் மீண்டும் அழைப்பு விடுக்கிறேன்... தயவுசெய்து, அரசியல் வேறுபாடுகளை ஓரமாக வையுங்கள். இது தமிழ்நாட்டின் உரிமைப் பிரச்சினை. சுயநலத்துக்காக, நம்முடைய சந்ததிகளை அடகு வைத்து விடாதீர்கள். உங்கள் முடிவை மனசாட்சியுடன் மறுபரிசீலனை செய்யுங்கள். நல்ல முடிவை எடுங்கள். அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு வாருங்கள். “எல்லோருக்கும் எல்லாம்” என்ற ஆட்சிப் பாதையில், மகிழ்ச்சியான - மலர்ச்சியான - வளர்ச்சியான தமிழ்நாட்டை உருவாக்குவோம்...

இந்தியாவின் முதன்மை மாநிலமாக வெற்றி நடைபோடுவோம்! அதற்கு எந்த இடர் வந்தாலும், யார் தடை போட்டாலும், அதை வென்று இந்த தமிழ்நாட்டை, மக்களான உங்கள் துணையுடன் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் காப்பாற்றுவான்...

**தமிழ்நாடு போராடும்!**

**தமிழ்நாடு வெல்லும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## நாகை மாவட்டத்திற்கு 6 முக்கிய அறிவிப்புகள்!

இத்தனை நன்மைகளை செய்வதுடன், இது போன்ற மிகப்பிரமாண்டமான நிகழ்ச்சிகளில் உங்களை பார்க்கும்போது, மேலும் சில அறிவிப்புகளை வெளியிடவேண்டும்... அதையெல்லாம் விரைவாக செய்து கொடுக்க வேண்டும் என்று நான் நினைப்பதுண்டு. அந்த வகையில், இந்த நாகை மாவட்டத்திற்கான ஆறு முக்கிய அறிவிப்புகளை இப்போது நான் வெளியிடுகிறேன்...

**முதல் அறிவிப்பு - வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு பகுதிகளில் இருக்கின்ற இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையில், தென்னடார் பகுதியில், அரசு புறம்போக்கு நிலத்தில் சுமார் 450 ஏக்கர் பரப்பளவில், 250 கோடி ரூபாய் செலவில், புதிய சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கப்படும்! காவிரி டெல்டா பகுதியில், அனுமதிக்கத் தகுந்த வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள் இங்கு தொடங்கப்படும்.**

**இரண்டாவது அறிவிப்பு - விழுந்தமாவடி, வானவன்மகாதேவி மற்றும் காமேஸ்வரம் ஆகிய மீனவ கிராமங்களில், 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

**மூன்றாவது அறிவிப்பு - தெற்குப் பொய்கைநல்லூரிலும் - கோடியக்கரையிலேயும் - தலா 8 கோடியே 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், மூன்று தளங்கள் கொண்ட பல்நோக்குப் பேரிடர் மையங்கள் கட்டப்படும்!**

**நான்காவது அறிவிப்பு - நாகப்பட்டினம் நகராட்சியின் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த நகராட்சி கட்டடம் 4 கோடி ரூபாய் செலவில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.**

**ஐந்தாவது அறிவிப்பு - நாகப்பட்டினம், கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யம் வட்டங்களில் இருக்கின்ற பல்வேறு வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களின் மதகுகளும், இயக்கு அணைகளும் 32 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்படும்!**

**ஆறாவது அறிவிப்பு - உலகம் முழுவதும் இருந்து வரக்கூடிய இஸ்லாமியர்கள் மட்டுமில்லாமல், பல மதங்களைச் சேர்ந்த மக்களும் வருகை தருகின்ற நாகூர் தர்கா, இந்த நாகை மாவட்டத்தில்தான் இருக்கிறது. இங்கே இருந்து இஸ்லாமிய மக்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய ஒரு செய்தியை ஆறாவது அறிவிப்பாக வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக - சென்னை விமான நிலையம் அருகில், நங்கநல்லூரில், 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்படும்!**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ.துரைசாமி

**மார்ச் 4 (1978)**



**நாகை நகர செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மிசா காலத்தில் நாகை நகரமே வியக்கத்தக்க வகையில் “அண்ணா சிலை” அமைத்து தலைவர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் திறக்கச் செய்தவர்.**

**நாகை வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், நீலாயதாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

கழகத்தலைவர் 72வது பிறந்த நாள் விழா!

## கோவை மாநகர் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் வழங்கினார்!

*கோவை, மார்ச் 4-*

*கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., சிங்காநல்லூர் பகுதி 2 ,வார்டு எண்54,நீலிக்கோணாம்பாளையம், மதுரை வீரன் கோவில் பகுதியில், கழகத் தலைவர், திராவிட நாயகன், அன்புத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு, ஏழை எளிய மக்கள் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.*

*சிங்காநல்லூர் பகுதி 2 திமுக செயலாளர் மு.சிவா முன்னிலையில், 54 வது வார்டு செயலாளர் கே. ஆனந்தகுமார் தலைமையில் விழா நடைபெற்றது.*

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட நிர்வாகிகள், சென்னை பெருநகர் ஆட்டோ ஓட்டுனர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள், தமிழ்நாடு மோட்டார் வாகன ஓட்டுனர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் **08.03.2025 சனிக்கிழமை** அன்று நண்பகல் 12.00 மணி அளவில் சென்னை **தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான “கலைஞரகத்தில்”** தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநிலத் தலைவர் **டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி.** தலைமையிலும், மாநிலச் செயலாளர் **டி.செங்குட்டுவன்** முன்னிலையிலும் நடைபெறும். கூட்டத்தில் சம்மந்தப்பட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறோம்.

**கலைஞரகம்**
சென்னை - 17
நாள்- 01.03.2025

**மு.சண்முகம்**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா என். இராமசாமி

**மார்ச் 4 (2022)**



**தனது இளம் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**தஞ்சை நகரத்தில் வட்ட பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**1962ம் ஆண்டு தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டபோது, வாக்குச் சாவடி முகவராக பணியாற்றியவர்.**

**1976 நெருக்கடி காலத்தில் ‘ஜனநாயக கொலைகாரி இந்திரா ஒழிக’ என வாசகத்தை சுவர்களில் எழுதியதால், உள்நாட்டு தேசிய பாதுகாப்பு (மிசா) சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் ஒன்பது மாதம் தனிமை சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**